 www.Padasalai.Net விருதுநகர் மாவட்டம் www.Trb Tnpsc.com

## முழு ஆண்டுத் தேர்வு - 2024

### வகுப்பு 8

### தமிழ்

கால அளவு: 2.30 மணிநேரம் மதிப்பெண்கள்: 100

### பகுதி -1

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **10×1=10**

1) தமிழ் எழுத்துச் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டவர் ..........
அ) பாரதியார் ஆ) தந்தை பெரியார்
இ) வ.உ.சிதம்பரனார் ஈ) பெருஞ்சித்திரனார்

2) நீலகேசி கூறும் நோயின் வகைகள் ..........
அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஐந்து

3) கல்விப் பயிற்சிக்குரிய பருவம் ..........
அ) இளமை ஆ) முதுமை இ) நேர்மை ஈ) கடமை

4) 'கலனல்லால்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..........
அ) கலன் + லல்லால் ஆ) கலம் + அல்லால்
இ) கலன் + அல்லால் ஈ) கலன் + எல்லால்

5) 'மலர் பானையை வனைந்தாள்' - இத்தொடர் .......... பொருளைக் குறிக்கிறது.
அ) ஆக்கல் ஆ) அழித்தல் இ) கொடை ஈ) அடைதல்

6) காட்டிலிருந்து வந்த .................... கரும்பைத் தின்றன.
அ) முகில்கள் ஆ) முழவுகள் இ) வேழங்கள் ஈ) வேய்கள்

7) கயிறு + கட்டில் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ..........
அ) கயிற்றுக்கட்டில் ஆ) கயிர்க்கட்டில்
இ) கயிறுக்கட்டில் ஈ) கயிற்றுகட்டில்

8) சேரர்களின் தலைநகரம் ..........
அ) காஞ்சி ஆ) வஞ்சி இ) தொண்டி ஈ) முசிறி

9) அயோத்திதாசர் நடத்திய இதழ் ..........
அ) ஒரு பைசாத் தமிழன் ஆ) காலணாத் தமிழன்
இ) அரைப்பைசாத் தமிழன் ஈ) அரையணாத் தமிழன்

10) அடுத்தவர் வாழ்வைக் கண்டு .............. கொள்ளக்கூடாது.
அ) உவகை ஆ) நிறை இ) அழுக்காறு ஈ) இன்பம்

**ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக.** **5×1=5**

11) பொருளாதாரப் படிப்பிற்காக அம்பேத்கர் .......... சென்றார்.
12) சுங்குடிச் சேலைகளுக்குப் புகழ்பெற்ற ஊர் ..........
13) கலப்பில் .......... உண்டென்பது இயற்கை நுட்பம்.
14) சொல் வளமும் நற்பண்பும் உடையவர்கள் தாம் பேசும் ....... தகுதி அறிந்து பேச வேண்டும்.
15) அசை .......... வகைப்படும்.

**இ) பொருத்துக.** **5×1=5**

16) நிறை - இயல்புப் புணர்ச்சி
17) பெருமையை அழிப்பது - அகவலோசை
18) ஆசிரியப்பா - சிந்தாமணி
19) மணி முடி - குன்றிமணியளவு தவறு
20) இயற்கைத்தவம் - மேன்மை

### பகுதி -2

**ஈ) குறுகிய விடையளி.**

**அ) எவையேனும் நான்கனுக்கு மட்டும் விடையளி.** **4×2=8**

21) தமிழ் எவற்றை அறிந்து வளர்கிறது?
22) நம்மை நோய் அணுகாமல் காப்பவை எவை?
23) மனிதனின் மனம் கலங்கக் காரணமாக அமைவது யாது?
24) கலிங்க வீரர்கள் எவ்வாறு அஞ்சி ஓடினர்?
25) கவலைகளைக் கவிஞர் எவ்வாறு உருவகப்படுத்துகிறார்?

**ஆ) எவையேனும் நான்கனுக்கு மட்டும் விடையளி** **4×2=8**

26) தமிழர் மருத்துவத்தில் மருந்துகளாகப் பயன்படுவன யாவை?
27) திரு.வி.க சங்கப் புலவர்களாகக் குறிப்பிடுபவர்களின் பெயர்களை எழுதுக.
28) விலைகொடுத்து வாங்க இயலாதவை எனச் சியாட்டல் கூறுவன யாவை?
29) ஓவிய எழுத்து என்றால் என்ன?
30) கொங்கு நாட்டில் பாயும் ஆறுகள் யாவை?

Kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

இ) எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடையளி 2×2=4

31) மெய் எழுத்துகள் எவற்றை இடமாகக் கொண்டு பிறக்கின்றன?

32) இயல்பு புணர்ச்சியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

33) இருவகை அசைகளையும் விளக்குக.

## பகுதி -3

உ) அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

அ) சிறுவினா 3×4=12

34) அ) மழையின்மையால் செடிகள் வாடிய நிலையை விளக்குக.

(அல்லது)

ஆ) நீதிநெறி விளக்கப்பாடல் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

35) அ) தமிழ்மொழியின் வளர்ச்சிக்காக எம்.ஜி.ஆர் ஆற்றிய பணிகள் யாவை?

(அல்லது)

ஆ) கொங்கு மண்டலச் சதகம் கூறும் கொங்கு மண்டலத்தின் எல்லைகள் யாவை?

36) அ) வேற்றுமை அணியைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

ஆ) வினையெச்சத்தின் வகைகளை விளக்குக.

ஆ) சிந்தனை வினா (எவையேனும் இரண்டனுக்கு மட்டும்) 2×5=10

37) நோய் வராமல் தடுக்கும் வழிமுறைகளாக நீங்கள் கருதுவன யாவை?

38) உழவுத்தொழில் சிறக்க இன்றியமையாதனவாக நீங்கள் கருதுவன யாவை?

39) அன்றாட வாழ்வில் நாம் பிறருக்கு எத்தகைய உதவிகளைச் செய்யலாம்?

## பகுதி -4

ஊ) அடிபிறழாமல் எழுதுக. 4+2=6

40) அ) 'வழிவர் சிலர்கடல்' ........ முதல் 'இன்றியே' முடிய உள்ள படைவேழம் மனப்பாடல் பாடலை எழுதுக.

ஆ) 'வாழ்க நிரந்தரம்' என்னும் தமிழ்மொழி வாழ்த்துப்பாடலை எழுதுக

41) 'விடல்' என முடியும் குறளை எழுதுக.

## பகுதி -5

எ) மொழிப்பயிற்சி. (எவையேனும் நான்கனுக்கு மட்டும்) 4×2=8

42) கலைச்சொல் தருக.

அ) Victory ஆ) Rational

43) கோடிட்ட இடங்களைப் பொருத்தமான சொற்களால் நிரப்புக.

அ) சிறுமி ........... (தனது / தமது) கையில் மலர்களை வைத்திருந்தாள்

அ) இவை .......... (தான் / தாம்) எனக்குப் பிடித்த நூல்கள்

44) தொடர்களின் வகையைக் கண்டறிந்து எழுதுக.

அ) பாரதியார் பாடல்களின் இனிமைதான் என்னே! ..........

ஆ) நீ எத்தனை புத்தகங்களைப் படித்திருக்கிறாய்? ............

45) சரியான மரபுச் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

அ) பூ .......... (கொய் / பறி)

ஆ) பால் .......... (குடி / பருகு)

46) உரிய இடங்களில் நிறுத்தக்குறிகளை இடுக.

அ) திருக்குறள் அறம் பொருள் இன்பம் என்னும் முப்பால் பகுப்பு கொண்டது.

ஆ) திரு.வி.க எழுதிய பெண்ணின் பெருமை என்னும் நூல் புகழ் பெற்றது.

47) மரபுத்தொடர்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

அ) வாழையடி வாழையாகத் ..........

ஆ) பசுமரத்து ஆணி போல ...........

## பகுதி -6

ஏ) விரிவான விடையளி 3×8=24

48) அ) பூனா ஒப்பந்தம் பற்றி எழுதுக.

(அல்லது)

ஆ) காப்பியக் கல்வி குறித்துத் திரு.வி.க கூறும் செய்திகளை எழுதுக.

49) அ) குழந்தை கிருஷ்ணாவின் பண்புநலன்களைக் கூறுக.

(அல்லது)

ஆ) 'அறிவுசால் ஔவையார்' - என்னும் நாடகத்தைச் சிறுகதை வடிவில் எழுதுக.

50) அ) விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற உங்கள் நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக.

(அல்லது)

ஆ) 'நாட்டின் வளர்ச்சியில் இளைஞர்களின் பங்கு' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com